“தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நத்தார் வேண்டுதல்”

# “அவசரகால உதவி நிவாரணத் திட்டம்”

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்

## “நத்தார் வேண்டுதல் ரேடியோதொன்”

## நிதி சேகரிப்பு நிகழ்ச்சி

விக்டோரிய ஈழத்தமிழ்ச் சங்கம் நடாத்தும் 3CR (855AM) தமிழ்க்குரல் வானொலியூடாகவும், 24 மணிநேர இன்பத்தமிழ் ஒலி வானொலியூடாகவும் மெல்பேணின் மற்றைய சமூக வானொலிகளும் இணைந்து பங்குகொள்ளும் இந்நிகழ்ச்சி

**25 மார்கழி 2007**

**காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரை நடைபெறும்**

வானொலி ஒலிபரப்பு நேரத்தில் உங்கள் நன்கொடையை வழங்க தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்

# 1300 721 399

வானொலி ஒலிபரப்பு நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் உங்களது நன்கொடைகளை வழங்க தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்தை

(03) 9888 3899இல் தொடர்பு கொள்ளவும்.

✂------------------------------------------------------------------------------------------------

## YES! I WANT TO SUPPORT TRO'S X'MAS RADIOTHON

Dr, Mr, Mrs, Ms ……………………………………………………………………………………

Address ……………………………………………………………………………………

……………………………………………………………………… Postcode ……………………………

Phone No: Work ………………………………………… Home ………………………………………

**Please find enclosed:** Cash ☐ Cheque ☐ Money order ☐

Payable to the **Tamils Rehabilitation Organisation** for the amount of $25 ☐, $50 ☐, $100 ☐, $ ……..other

OR, Please Debit my **MasterCard** ☐, **Visa card** ☐

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | |

Expires ___ / ___

Name on Card ____________________

Signature ____________________

During a forthcoming Radiothon programme we will be announcing names

**If you do not wish your name to be announced, please tick this box** ☐

**Our contact details**:
Tamils Rehabilitation Organisation
P.O.Box 4254,
Knox City, VIC 3152
Tel/Fax : (03) 9888 3899

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - அவுஸ்திரேலியா

## வருடாந்த நத்தார் வேண்டுதல் - 2007

### வடகிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கும் இடம்பெயர்ந்தோருக்கும் நாளாந்த வாழ்க்கைத் தேவைகளுக்குமான அத்தியாவசியப் பொருட்களுக்கும், சேவைகளுக்குமான தட்டுப்பாடு, சுதந்திர நடமாட்டத்துக்குத் தடங்கல்கள்

வடகிழக்கின் முக்கிய பெருந்தெருக்கள் மூடப்பட்டு இருப்பதாலும் மற்ற வீதிகளில் இராணுவச் சோதனைச் சாவடிகள் தொகையாக அமைக்கப்பட்டிருப்பதாலும் வடகிழக்கு மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு இயல்பாகப் போகமுடியாதநிலை உருவாகியிருக்கிறது. அத்துடன் அன்றாடவாழ்வுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருட் களைக்கூட கொண்டுசெல்வதற்கு சிறீலங்கா இராணுவத்தினர் தடைவிதித்திருக்கின்றனர். தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள், மற்றைய அரசசார்பற்ற தொண்டர் நிறுவனத்தினர் எவரும் அங்கு பணியாற்றுவதற்கு இராணுவம் அனுமதிமறுப்பதுடன், அவர்களின் சுதந்திரமான செயற்பாட்டிற்கும் பலவிதமான தடங்கல்களை ஏற்படுத்துவதனால் மக்களின் பசி பட்டினியைப் போக்குவதற்கு எவரும் முன்னிலையில் நின்று கை கொடுத்து உதவமுடியாத நிலை. அத்துடன் வீட்டிலிருந்து வெளியேபோய் உணவு, மாற்றுடை, மருந்து முதலிய அவசரதேவைப்பொருட்களைப் பெற்றுக் கொண்டு வரமுடியாது. எந்நேரம் குண்டுவீச்சு விமானங்கள் குண்டு போடுமோ என்று ஏங்கிக்கலங்கியபடி உயிருக்குப் பயந்து வீட்டினுள்ளே அல்லது பங்கரினுள்ளே பதுங்கி அச்சத்தோடு வாழும் நிலைமை!! மேற்கூறிய காரணங்களுடன் உணவும் உடுப்பும் கிடைக்காத அப்பாவி மக்கள், வானிலிருந்து குண்டுவீச்சு விமானங்களின் குண்டு மாரியினாலும் எதிரியின் எறிகணைகளாலும் படுகாயமுற்று மருத்துவமனைக்குக் கொண்டு செல்லமுடியாத நிலைமை!!!

### நாங்கள் ஏற்றுக்கொண்ட திட்டங்களுக்குத் தேவையான நிதியை அனுப்பிவைப்பதற்கு ஒழுங்குகள் செய்கின்றோம்.

இலங்கையின் வடகிழக்கில் கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் இனக்கலவரமும் உள்நாட்டு யுத்தமும், வெள்ளஅழிவும், ஆழிப்பேரலை என தொடர்ந்துவந்த அனர்த்தங்களும் அவர்களின் வாழ்க்கையை ஒரு கேள்விக்குறியாக்கிவிட்டன. இவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு தொடர்ந்தும் பராமரிப்பும் உரிய உதவிகளும் அளிக்காவிடில் அவர்கள் நோய்வாய்ப்பட்டும் போஷாக்கின்மையால் நொடிந்தும், மடிந்தும் போவார்கள். தற்போது அங்கு நடைபெற்றுவரும் அவலநிலை அவர்கள் இன்னும் மோசமான நிலைக்குக் கொண்டுவந்துவிட்டுள்ளது. எம் உறவுகளின் அடிப்படைவசதிகள் மறுக்கப்பட்டநிலையில், எமது அன்பளிப்பு அவர்களின் வாழ்க்கையை மாற்றிக் கொள்ள உறுதுணையாக அமையட்டும். இந்நிலையில் வருடாவருடம் புனித நத்தார் தினத்தில் தங்களால் இயன்றளவு நிதிஉதவியை அர்பணித்துவரும் அன்பான இதயங்களே! இன்றைய நிலையில் எம்மக்கள் படும் துயரம் கடந்துசென்ற ஆண்டுகளைவிட மிகக் கொடுமையானதாகும் என்பது அனைவராலும் மறுதலிக்கப்படாத உண்மை. **அங்கே தேவைகள் பல! அவற்றுக்கு எதிரே தடைகள் மிகப்பல!! இங்கே எமது கடமைகள் மிக மிகப்பல!!!** என்பதெல்லாம் நன்குஅறிந்த எமது உணர்வுமிக்க மக்களே, உங்கள் பங்களிப்பை, புனித நத்தார் வானொலி நிதிசேகரிப்பு நாளன்று (25/12/2007) கருணைகூர்ந்து வழங்குமாறு அன்பாக வேண்டுகின்றோம். எனவே இவ்வருட நத்தார் நிதிசேகரிப்பின்போது அவுஸ்திரேலியா தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் **"அவசரகால உதவி நிவாரணத் திட்டத்திற்காக"** உங்கள் நன்கொடைகளை, வாரி வழங்கி, எமது தாயகத்து உறவுகளின் துயரங்களை களைவதிற்கு பங்களியுங்கள்!!!

# TAMILS REHABILITATION ORGANISATION – AUSTRALIA

## Annual Christmas Appeal– 2007

### The victims of war and the displaced peoples are in constant need of assistance

*The closures of main roads and the increased number of Sri Lankan military checkpoints have impeded the free movement of the people in North East of Sri Lanka. The restrictions on the supply of desperately needed essential items, including medicine, essential consumer goods and the barriers for the non-governmental organisations to assist in the affected areas are leading to a humanitarian disaster. They are in constant fear of being bombed from planes and shelling from the land. They have nowhere to go except to remain in the bunkers most of day and night. Their houses have been bombed or shelled and damaged beyond repair. Those injured by bombs or shells have no access to treatment due to lack of medical facilities and medications. Currently 208,000 persons have been displaced since April 2006 with over 20,400 persons being forcibly displaced due to GoSL bombing and shelling since September 2007. ("IDPs and Returnees by District", UN OCHA, 31 Oct 2007) In addition to those displaced since April 2006 there are many thousands who remain displaced by the conflict prior to April 2006 and by the 2004 tsunami.*

### We have taken measures to provide funds to the projects we are committed to support

*TRO has recognised **Holy Christmas day** annually as a special day to remember and help the tens of thousands of internally displaced people in the North East of Srilanka. We have dedicated this day for "TRO's Christmas appeal" in Australia. On this day, we are organising a Radiothon funds raiser to raise money for relief activities & create awareness of the plight of the internally displaced people and of the life of children growing under appalling conditions due to the war. We kindly request our friends and well wishers to take part in this great event. We appeal to you for your support and generosity.*

***HELP US REBUILD THEIR LIVES BY PROVIDING A SUSTAINABLE FUTURE - THEIR FUTURE IS IN YOUR HANDS!***

**We appeal to the kind-hearted donors to contribute liberally towards this "*Emergency Relief Fund*"!!**

**Thank you!!!**